REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 302

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.F.F

PHONE: ...

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 20உ புதன் (2—6—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 21உ வியாழன் (3—6—54)

"நிலப் பிரபுக்கள் ஆதிக்கம் ஒழிக!"

—(:)—

அம்பாசமுத்திர வட்டாரத்தில் உழவர் கிளர்ச்சி

எரு வண்டிகள் ஊர்வலக் காட்சி

"துரோகிகளுக்கு இடம் தரோம்" என முழக்கம்

உழவு வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டாரத்தில் உழவர்கள் கிளர்ச்சி சில நாட்களாக மும்முரமாகி விட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் உள்ள நிலப் பிரபுக்களுக்கும் உழவர்களுக்கும் தகராறு முற்றிவிட்டிருக்கிறது.

பாப்பான்குளம், விக்கிரமசிங்கபுரம், தப்பாக்குடி, பிரம்மதேசம் ஆகிய இடங்களிலே, கிளர்ச்சி பரவி இருக்கிறது.

விக்கிரமசிங்கபுரத்தில், நிலப் பிரபுக்களால், வேலையினின்றும் நீக்கப்பட்ட உழவர்கள், எழுச்சி மிக்க ஊர்வலம் ஒன்று நடத்தினர்.

50 வண்டிகளில் எரு ஏற்றிக்கொண்டு, ஊர்வலமாகச் சென்றனர். நிலப் பிரபுத்துவ ஆதிக்க ஒழிப்பு முழக்கமிட்டுக்கொண்டு ஊர்வலம் சென்றது. பிறகு உரத்தை வயல்களில் கொட்டிவிட்டு, மேற்கொண்டு வேலை எதும் செய்யாமல் வீடு திரும்பினர்.

வேறு உழவர்களைக்கொண்டு தங்கள் காரியத்தை முடித்துக் கொள்ள நிலப்பிரபுக்கள் முயலுகின்றனர்; ஆனால், அத்தகைய துரோகிகளுக்கு இடம் தர மாட்டோம் என்று உழவர்கள் முழக்கமிடுகின்றனர்.

தலைமுறை தலைமுறையாக தம்மிடம் அடங்கி நடந்து வந்தவர்கள் இப்போது, இப்படி எதிர்த்துப் பேசுகிறார்களே என்று நிலப் பிரபுக்கள் ஆயாசப்படுகிறார்கள்.

இவ்வளவும், தூண்டிவிடும் தலைவர்களால் ஏற்படுவதுதான் என்று வழக்கப்படி நிலப் பிரபுக்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

பல இடங்களிலே உழவு வேலை நடைபெறவில்லை; வயல்கள் வரண்டு கிடக்கின்றன; புதுப் பயிர் ஆரம்பிக்க வேண்டிய காலம் இது; எனவே, இந்தச் சமயத்தில் கிளர்ச்சி மூண்டு விட்டது கண்டு நிலப் பிரபுக்கள் கிலி கொண்டுள்ளனர்.

உழவர் கூட்டங்கள் பல நடைபெறுகின்றன. உழவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிலப் பிரபுக்கள் இணங்காவிட்டால், நிலங்களை உழவர்களே கைப்பற்றிக் கொள்ள வேண்டியதுதான் என்று கிளர்ச்சிக்காரர்கள் தூண்டிவிடுவதாக நிலப் பிரபுக்கள் புகார் செய்கின்றனர். இல்லாததும் பொல்லாததும் கூறி, உழவர்கள் மனதைப் பல கட்சிக்காரர்கள் கெடுத்து விட்டிருக்கிறார்கள் என்று நிலப் பிரபுக்கள் குறை கூறுகிறார்கள்.

100 ஏகருக்குமேல் கூடாது

★

சென்னை சர்க்கார், நில சீர்திருத்தம் செய்வதற்காகத் திட்டமிடுவதில், யாரும் 100 ஏகர் நிலத்துக்குமேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்று குறித்திருப்பதாகத் தெரிகிறது.

ஆணை பிறந்து விட்டது!

சென்னை, ஜூன் 1—

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தைக் கைவிட சென்னை அரசு செய்துள்ள முடிவு எல்லா மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கும், அறிவிக்கப்பட்டு விட்டது.

மாநிலக் கல்வி அதிகாரியின் அலுவலகத்திலிருந்து மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கண்டிருப்பதாவது:—

"புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்திற்கு சட்ட சபையிலும் நாட்டிலும் ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக, அத்திட்டத்தை கைவிட்டுவிட்டு, புதிய திட்டம் அமுலாக்கப்படும் முன் நடைமுறையில் இருந்த பழைய ஆரம்பக் கல்வி முறையே, வரும் ஆண்டுத் துவக்க முதல் பள்ளிகளில் பின்பற்றப்பட வேண்டும் என சர்க்கார் முடிவு செய்கிறது."

ராமசாமி 'கனம்' ஆனதன் பலன்

வன்னிய சமூகத்தில் பேதம்—பிளவு!

மாநாடு கூட்டக் கூடினர்; மாச்சரியம் மூண்டது!

உழைப்பாளர் கட்சித் தலைவர் தோழர் எஸ். எஸ். ராமசாமி காங்கிரஸ் மந்திரி சபையில் சேர்ந்ததை, 'தி. மு. க.-தான் எதிர்க்கிறது.' என்று சிலர் குறை கூறினர். தோழர் ராமசாமி 'கனம்' ஆனதன் பலன், வன்னிய சமூகத்திலே பேதமும், பிளவும்தான் என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது. 'கனம்' இராமசாமியை வன்னியரே கண்டிக்கின்றனர். இந்த எதிர்ப்புக்குத் தலைமை வகிக்க, திண்டிவனம் தோழர் கோபால் கவுண்டர், எம். எல். ஏ., முன்வந்திருக்கிறார்.

சமீபத்தில், திண்டிவனத்தில் நடைபெற இருக்கும் வன்னியர் மாநாடு சம்பந்தமாக, வரவேற்புக் குழு அமைக்க, தென்னார்க்காடு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து வன்னிய குலப் பிரமுகர்கள், திண்டிவனத்தில் தோழர் கோபால கவுண்டர் இல்லத்தில் கூடினர்.

மாநாட்டிலே, தோழர் ராமசாமி மந்திரி வேலைக்குச் சென்றதைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும், தொடர்ந்து 10 ஆண்டுகளாக வன்னியர் சங்கத்துக்கு தோழர் ராமசாமியே தலைவராக இருந்து வருவதால், இம்முறை புதுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் பலர் பேசினர்.

கண்டனம் வலுவடைந்தது; குழப்பம் மூண்டது.

அமைச்சரின் ஆதரவாளர்கள் கண்டனக் கணைகளைக் கண்டு கோபம் கொண்டு, கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

வேலூர் இடத்தில் அவர்கள் கூடி, மாநாட்டுக்கு வரவேற்புக் குழு அமைத்தனர்.

பர்மிய சர்க்கார் பசப்பு!

—(:)—

கரேனியருக்குத் தனி நாடாம்!

உரிமைக் கிளர்ச்சியை அடக்க சூழ்ச்சி

இரங்கூன், ஜூன் 1—

கிழக்கு பர்மாவின் வட பகுதியில் 1800 சதுர மைல் பரப்புள்ள பிரதேசத்தை கரேனியரின் தனி நாடாக இன்று பர்மிய சர்க்கார் பிரகடனம் செய்தனர். கரேனியர்களின் கிளர்ச்சி குறைந்து போனதால்தான் சர்க்கார் இந்த ஏற்பாட்டினைச் செய்தனர் என்று தெரிகிறது.

பர்மியக் குடியரசுத் தலைவர் புதியதாக அமைக்கப்படும் கரேன் நாட்டிற்கு 'லோகல்' அதிகாரங்களை வழங்கி உத்திரவிட்டார்.

இதன் மூலம் 1947-ம் ஆண்டு முதல் நடைபெற்ற கரேனியர்களின் கிளர்ச்சி முடிவடைகிறது என்று பர்மிய சர்க்கார் நம்புகிறதாம்.

தங்கள் தனி நாடு கோரிக்கைக்கு கரேனியர்கள் பலாத்கார முறைகளைக் கையாண்டதால்தான், தனி நாடு அமைய இவ்வளவு தாமதம் ஆயிற்று என்று பர்மியப் பிரதமர் யு-நு கரேன் நாட்டின் ஆரம்ப விழாவில் சமாதானம் கூறினார்.

கரேனியர்கள் கேட்பது, எல்லா அதிகாரங்களையும் உடைய சுதந்திர கரேன் நாடு.

பர்மிய சர்க்கார், கரேன் சுதந்திர வாதிகளைக் கலகக்காரர்கள் என்று குற்றம் சாட்டி, அடக்குமுறைகளை வீசியது.

உரிமைக் கிளர்ச்சியை அடக்க முடியாமல், ஒரு சில அதிகாரங்களைத் தந்து பர்மா யூனியனுக்கு உட்பட்ட கரேன் நாட்டை இப்போது பர்மிய சர்க்கார் அமைத்து விட்டு, தனிநாடு கொடுத்து விட்டோம் என்கிறது.

தனி நாடு கோரிக்கை நிறைவேறியது என்று பர்மிய சர்க்கார் கூறுவது சரியல்ல: சுதந்திரக் கரேன் நாடே கரேனிய மக்களின் கோரிக்கை.

டாக்காவில் ஹர்த்தால்

முகமதலி தர்பாரைக் கண்டித்து டாக்கா நகரில் பூரண ஹர்த்தால் நடைபெற்றது வண்டிகள் எதுவும் வீதிகளில் காணப்படவில்லை. துருப்புகள் பவனி வருகின்றன—என்று டாக்காவிலிருந்து விமான மூலம் கல்கத்தா வந்தவர்கள் கூறுவதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' தெரிவிக்கிறது.

கராச்சி சர்வாதிகாரம்

மாஸ்கோ ரேடியோ கண்டனம்

அமெரிக்காவின் கரம் தெரிகிறது எனப் புகார்

முகமதலியின் கோபமும் சாகசமும்

★

மாஸ்கோ ரேடியோ, முகமதலியின் போக்கைக் கண்டித்திருக்கிறது.

கிழக்கு வங்கத்திலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னணியிடம் இருந்த ஜனநாயக சர்க்காரை ஒழித்துவிட்டு, கவர்னர் ஆட்சியை ஏற்படுத்தியதற்குக் காரணம், அமெரிக்க தூண்டுதல்தான் என்று மாஸ்கோ ரேடியோ குற்றம் சாட்டியிருக்கிறது.

பாக்—அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தை, கிழக்கு வங்க மக்கள் பலமாகக் கண்டித்தது கண்டு பயந்தே அமெரிக்கா, அங்கு கவர்னர் மூலம் இராணுவ ஆட்சி ஏற்படுத்தியதாகக் கூறுகிறது.

முகமதலி சர்க்கார், மாஸ்கோ ரேடியோவின் கண்டனத்தைக் கண்டித்து ரஷ்ய சர்க்காருக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறது.

நிலைமை சரியான உடன் மீண்டும் கிழக்கு வங்க ஆட்சி முன்னணியிடமே ஒப்படைக்கப்படும் என்றும், புதிய கவர்னர் திறமை மிக்க நிர்வாகி—அவர் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பார் என்றும் முகமதலி ரேடியோவில் பேசியிருக்கிறார்.

கராச்சி மத்திய சர்க்கார் கிழக்கு வங்கத்துக்கு 5 கோடி ரூபாய் கடனுதவ வேண்டுமென்று புதிய கவர்னர் வேண்டிக் கொண்டிருக்கிறார்; இது உணவு நிலைமையைச் சரிக்கட்டுவதற்காகவாம்.

ஒவ்வொரு நாளும் டாக்கா பகுதியில் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

"கராச்சியிலே சர்வாதிகாரம்"
(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2–6–54 புதன்

நல்ல முயற்சி!

காட்டு ராஜாக்கள் போன்ற குணமும், பாரிஸ் துரைமார் போன்ற களியாட்ட சுபாவமும் கொண்ட நிலப் பிரபுக்களின் கொட்டத்தைக் கண்டு மனம் வெகுண்டு கிடக்கும் பாட்டாளிச் சமுதாயத்தை, பலமான அடக்குமுறை கொண்டு அழித்துவிட முயற்சித்தும், வளரும் புரட்சிச் சக்தியை ஒழித்திடவோ ஒடுக்கிடவோ முடியாது-எவ்வளவு இரத்தக் காணிக்கை கொடுத்தேனும் இலட்சியத்தை அடைய அவர்கள் நெஞ்சில் உறுதி கொண்டுவிட்டனர் என்பதை பல்வேறு இடங்களிலே உள்ள ஆட்சியாளர்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டனர்.

நிலப் பிரபுக்களேகூட இதனை உணர்ந்து கொண்டனர் இதுதான் கடைசி தலைமுறை; தங்கள் காலத்தோடு 'தர்பார்' முடிவடைய வேண்டியதுதான் என்பதை! 'கொழுத்த குடிசையை! இழுத்துவா, கொண்டையைப் பிடித்து! கட்டிவைத்து அடி, கீழே விழுகிறவரையில்!'—என்று கொக்கரித்துக் கொண்டிருந்த கொடுங்கோலர்கள் கூட உணர்ந்து கொண்டுவிட்டனர்.

அவர்கள், சவுக்கைக் காட்டித் தமது சர்வாதிகாரத்தை இனி நிலைத்திடச் செய்ய முடியாது என்பதை அறிந்து கொண்டு, இதுபோது 'ஜெபமாலை'யைக் காட்டி மயக்கலாம் என்று ஓர் அசட்டுத்தனமான ஆசை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்!

ஆட்சியாளர்களின் முழு ஆதரவு பெறுவதற்காக இந்தக் கனதனவான்கள், கண்ணன் படத்துக்குப் பக்கத்திலே காந்தியார் படத்தை வைத்தும், ராமஜயந்தி கொண்டாடுவது போலவே காந்தி ஜெயந்தி கொண்டாடியும், கனக மணிமாலை அணிவது போலவே கதரை அணிந்தும், மத அதிபரிடம் பக்தி காட்டுவது போலக் காங்கிரஸ் தலைவர்களிடம் பயபக்தி காட்டியும், தங்கள் பாதுகாப்புக்கு வழி தேடிக்கொள்ள முயன்றனர்

காங்கிரஸ் ஆட்சியாளர்களும்—நேரு உட்பட—இந்தக் கனதனவான்களின் நேசத்தையும் பாசத்தையும் பெரிதும் விரும்பி, அபயம் அளித்து, தங்களிடம் உள்ள அய்யாக்கிய படையை அவர்களுக்குத் துணை இருக்க அனுப்பி அவர்களின் ஆதிக்கம் அழிந்துபடுவதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

இந்தக் கேவலமான கூட்டுறவு கண்டு மக்கள் காங்கிரசையே பகைக்கத் தொடங்கி, கடந்த பொதுத் தேர்தலின் போது காங்கிரசுக்குத் தக்க பாடமும் காட்டினர்.

இப்போதும், விவசாயிகளின் கிளர்ச்சியை ஒடுக்க, கனதனவான்கள் காங்கிரஸ் சர்க்காரின் ஆதரவைக் கேட்கிறார்கள்; பெறுகிறார்கள்; எனினும், 'இது நீண்ட காலத்துக்கு நடைபெறக்கூடியதல்ல,' என்பதையும் உணருகிறார்கள்.

உலக மக்கள் ஆச்சரியத்தால் விழிகளை அகலமாக்கிக் கொண்டு பார்க்குமளவுக்கு, மகத்தானதோர் புரட்சி சீனாவில் நடைபெற்றது—அந்தச் சம்பவம், சீமான்களின் செருக்குக்கு ஓர் சம்மட்டி அடியாக மாறிற்று! எனவே ஏதேனும் சில சீர்திருத்தம் செய்தாலொழிய, மக்கள்முன் தலைகாட்ட முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

காங்கிரசைத் தமது கேடயமாகக் கொள்ளலாம் என்று கனவான்கள் எண்ணினால், கேடயத்தைத் தூளாக்கிவிட மக்கள் துணிந்து திரண்டு எழுகின்றனர்!

எனவே, நில சம்பந்தமாகச் சீர்திருத்தம் செய்து ஆக வேண்டும் என்ற நிலைக்கு அரைத்தனத்தார் துரத்தப்பட்டிருக்கிறார்கள்.

உரிமை முழக்கமும், உள்ளத்தில் பட்ட உண்மையை எடுத்துரைக்க அஞ்சலாகாது என்ற உரமும், எத்தகைய எதிர்ப்பு வரினும் அஞ்சிடலாகாது என்ற துணிவும், தியாக உணர்ச்சியும் கொழுந்து விட்டு எரிகிறது 'நம்மால் என்ன ஆகும்' என்ற பெருமூச்சுப் பேச்சும், 'அவன் பார்த்துப் படியளக்க வேண்டும்' என்ற ஆபாசப் பேச்சும், 'பாவமாமே, நரகமாமே' என்ற பய உணர்ச்சியும், பட்டுப்போய்விட்டது!

'வாழப் பிறந்தோம்; பாடுபடுகிறோம், ஏன் வாழக் கூடாது' என்ற எண்ணமும், 'உழைப்பு, பிறருடைய உல்லாச வாழ்வுக்காகக் களவாடப்படுகிறது, இதனை ஒழித்தாக வேண்டும்' என்ற உறுதிப்பாடும் மேலோங்கி நிற்கிறது!

உழவர் பெருமக்கள் ஆங்காங்கு கிளர்ச்சிகள் நடத்தி வருகின்றனர்; கிலி கொண்ட நிலப் பிரபு, தன் ஊரிலே இருக்க முடிக்கு, குறைவதைக் கண்டு கலங்குகிறான்.

புரட்சி வாடை வீசுகிறது; புது அமைப்பு ஏற்பட்டாக வேண்டும் என்ற புரட்சி ஒலிக்கிறது; புல்லர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடப்படுகிறது!

இந்நிலையில், சமுதாயத்தின் மொத்த நலனில் அக்கறை கொண்ட சர்க்கார் நிச்சயமாக இந்தத் துறையிலே, முற்போக்கான மாறுதலைப் புகுத்தியாக வேண்டும்; —இல்லையெனில் சுழலில் சிக்கலாகும்!

சென்னை சர்க்கார் நில சம்பந்தமாக சீர்திருத்தம் செய்வதுபற்றி தீவிரமாக யோசித்து வருவதாக அறிக்கை வெளிவரக் கண்டு அகமகிழ்கிறோம்.

'ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல், யாரிடமும் நிலம் குவியக் கூடாது;

"அந்த அளவுக்கு மேல், ஒருவரிடம் உள்ள நிலத்தைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும்;

"சர்க்கார் அங்ஙனம் எடுத்துக் கொள்ளும் நிலத்தை, உழவருக்குப் பகிர்ந்தளித்தல் வேண்டும்;

'நிலப் பிரபுக்களுக்கு ஏதேனும் நஷ்டஈடு தரவேண்டும்,"

இவை, சென்னை சர்க்காரின் ஆலோசனையில் உள்ள விஷயங்களாம்; மகிழ்கிறோம்.

நிலப் பிரபுக்களும், அவர்களை ஆதரிக்கும் சட்ட நிபுணர்களும், மத குருமார்களும் சீறி எழுவர்—சட்டத்தையும் சாஸ்திரத்தையும் காட்டுவர்—சர்க்கார் அஞ்சலாகாது.

இவ்விதமான ஓர் இன்றியமையாத திருத்தம் செய்யும்போது, எல்லா முற்போக்குக் கட்சிகளின் கருத்தையும் அறிந்து கொண்டு தக்க திட்டம் தீட்டுவதே முறை.

எடுத்துக்காட்டுக்கு ஒன்று கூறுவோம்—நஷ்டஈடு என்ற பெயரால், நிலப் பிரபுக்களுக்குக் கொள்ளைப் பணத்தைக் கொட்டிக் கொடுப்பது என்பதை முற்போக்குக் கட்சி நியாயமென்றோ, தேவையென்றோ, அவசியமென்றோ, கருதாது.

சர்க்கார் தன்னிச்சைப்படி, அல்லது காங்கிரஸ் கட்சியின் கருத்தை மட்டுமே கேட்டு, இது சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வந்தால், நிச்சயமாக, நன்மையை விடத் தீமையே பயக்கும்.

இன்று காங்கிரஸ் உள்ள நிலைமையில், காமராஜர் எவ்வளவு வாக்குறுதி அளித்தாலும், எவ்வளவு கண்விழிப்பாக இருந்தாலும், நிலப் பிரபுக்களின் குரலே மேலோங்கி நிற்கும்.

எனவே, நாட்டின் நலனில் அக்கறை கொண்ட எல்லா முற்போக்குக் கட்சிகளின் கூட்டணி திரண்டு நின்றால்தான் கொள்கை தழைக்கும்; குணம் மணக்கும்!

நல்ல முயற்சி — இதனை வரவேற்கிறோம்!

வட ஆற்காடு மாவட்ட தி.மு.க. மாநாடுகள்

வடார்க்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக சமூக—சீர்திருத்த—அரசியல் மாநாடுகள் மேலூரில், 19, 20—6—54 தேதிகளில் நடைபெறும்.

இரண்டு நாள் மாநாட்டிலும், தொண்டர்களாகப் பணியாற்ற விரும்பும் தோழர்கள் கீழ்க்காணும் முறைகளை அனுசரிக்க கோருகிறோம்:—

1 ஒவ்வொரு தொண்டரும், கிளைக் கழகச் செயலாளரின் அத்தாட்சிப் பத்திரங்கள் இரண்டு வாங்கி, ஒன்றை, முதலில் மாநாட்டு அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டு, மற்றொன்றை வரும்போது எடுத்து வர வேண்டும்.

2. தொண்டர்களுக்கு உணவு வசதி மாநாட்டில் செய்து தரப்படும்.

3 தொண்டர்கள் போக்கு-வரவு செலவுக்கு அவரவரே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

4. தொண்டர்கள் முன் கூட்டியே 16—8—54-க் தேதி மாநாட்டு அலுவலகத்திற்கு வந்து தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

5. மாநாட்டில் கடமை உணர்ந்து, கட்டுப்பாடுடன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, பணியாற்றும் தொண்டர்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கப்படும்—என்று தொண்டர் படைத் தலைவர்கள் அறிவிக்கின்றனர்.

கோலார் தங்கவயல் தமிழகத்துக்கு!

ஒரு மாதத்தில் இணைப்பு

இல்லையேல் அறப்போர்!

ராபர்ட்சன்பேட்டை, மே 31-

கோலார் தங்கவயல் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், கோலார் தங்கவயல் பகுதியில் உள்ள மக்களில் 100-க்கு 95 பேர் தமிழர்கள் ஆகையால் அந்தப் பகுதியைத் தமிழகத்துடன் இணைக்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒரு மாதத்தில் இந்த இணைப்பு நடைபெற வேண்டுமென்றும், இல்லையென்றால் அறப்போர் நடத்துவது என்றும் பேசப்பட்டது

ஆரம்பப்பள்ளிகள்

சர்க்கார் கட்டிடமானியம் தருகிறது

சென்னை, மே 31—

ஊராண்மைக் கழகத்தினரும், எய்டெட் மானேஜ்மெண்டுகளும் ஆரம்பப் பள்ளிகள் கட்ட உதவும் பொருட்டு 1954—55-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சென்னை சர்க்கார் ரூ 75,000 ஒதுக்கி யிருப்பதாக சர்க்கார் தெரிவித்துள்ளனர்.

இத்தொகையில் ரூ 50,000 லோகல்பாடி ஆரம்பப் பள்ளிகளுக்கும் மீதம் ரூ 25,000 எய்டெட் பள்ளி மானேஜ்மெண்டார்களுக்கும் அளிக்கப்படுமாம்

சர்க்கார் கல்வி டைரக்டர் 1954—55 பட்ஜெட்டில ஆரம்பப் பள்ளிகளுக்கு ரூ 3,86 400 கட்டிட மானியம் அளிக்க வேண்டுமென்றும், ஊராண்மைக் கழகங்கள் நடத்தும் 45 ஆரம்பப் பள்ளிகளுக்கு ரூ. 2,32 400-மும், எய்டெட் மானேஜ்மெண்டுக்கு 35 பள்ளிகளுக்கு ரூ 1,54,000-மும், தரவேண்டுமென்று சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்.

கப்பல் உரிமையாளர் தண்டிக்கப்பட்டார்

நாசவேலை என்று கோவா போலீசார் குற்றச்சாட்டு

பம்பாய், மே 31—

கோவாவில் கப்பல் ஒன்றின் உரிமையாளராகிய கோவான் கோடிசெளசி என்பவருக்கு, கோவா 'மெரீன் டிரிபூனல்', நாசவேலை செய்தார் என்று குற்றம் சாட்டி ஐந்து ஆண்டு சிறைத் தண்டனை அளித்தது

கோவா துறைமுகத்திலிருந்து துருப்புகளை ஏற்றிக் கொண்டு டையூவிற்குசெல்லஅக்கப்பலுக்கு உத்தரவிடப்பட்டது டையூவில் தேசிய எழுச்சியை அடக்கவே இத்துருப்புகள் செல்ல இருந்தன. ஆனால் கப்பலில் பெரும் அபாயம் ஒன்று காணப்பட்டதால் கப்பல் துறைமுகத்தை விட்டுச் செல்ல இயலவில்லை

வேண்டுமென்றே கப்பலின் தளை போடப்பட்டதாக அதிகாரிகள் கருதி நாசவேலை என்று கப்பலின் உரிமையாளர்மீது வழக்கு தொடர்ந்தனர்.

கர்ப்பத் தடைக்கு புதிய வழி!

சில மாத்திரைகளை உட்கொள்வதால், கர்ப்பம் தரிக்காமல் ஒரு குறிப்பிட்ட காலம்வரை இருக்கலாமாம்.

இந்த மாத்திரைகளை உட்கொள்வதால், என்றென்றைக்கும் கர்ப்பமே தரிக்காத நிலையில்லாது, தேவையான காலம்வரை மட்டும் கர்ப்பம் தரிக்காமல் இருக்கலாமாம்.

இந்த முறைப்படி 300 பேர்கள் மாத்திரைகளை உட்கொண்டனர். கர்ப்பம் தரிக்காமலும் இருந்தனர். பின் மாத்திரைகள் சாப்பிடுவதை நிறுத்தியதும், அவர்களில் 30 பேர்களைத் தவிர ஏனையோரெல்லாம் கர்ப்பம் தரித்தனராம்.

இந்த விபரத்தை பம்பாய் டாக்டர் ஒருவர் மருத்துவக் கல்லூரிக் கூட்டமொன்றில் கூறினார்.

போலீசார்மீது கல் வீச்சு

15 பேர் கைது

பம்பாய் விக்டோரியா துறைமுகத்திற்கு வெளியே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பெயிண்டர்களும், மற்ற தொழிலாளர்களும் போலீசார்மீது கற்களை வீசியதில் இரண்டு போலீஸ் அதிகாரிகளும், ஆறு போலீசாரும் காயமுற்றனர். கூட்டத்தைக் கலைக்க போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். துறைமுக எல்லையில் கலகம் விளைவித்ததாக பதினைந்து தொழிலாளர்களைப் போலீசார் கைது செய்தனர்.

துறைமுகத்தில் நிற்கும் 'ஜெயபிரமா' என்ற கப்பலில் வேலை செய்ய பம்பாய் துறைமுக அதிகாரிகள் புதிய தொழிலாளிகளை அமர்த்தியதாகத் தெரிகிறது. அத்தொழிலாளிகளைப் போலீசார் தங்கள் மோட்டாரில் துறைமுகத்திலிருந்து வெளியே அழைத்துச் செல்கின்றனர் என்ற செய்தி வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளிகளிடையே பரவியது; இச்செய்தி தவறானது என்றுக் கூறப்படுகிறது.

போலீஸ் மோட்டாரை சோதனையிட வேண்டுமென்று வேலை நிறுத்தக்காரர்களின் கோரிக்கையைப் போலீசார் மறுக்கவே, ஆத்திரமடைந்த வேலை நிறுத்தக்காரர்கள் போலீசார் மீது கற்களை வீசியதாகச் சொல்லப்படுகிறது.

தமிழ் ஆசிரியர் மாநில மாநாடு

ஒத்திவைக்கப்பட்டது

செயலாளர் அறிவிப்பதாவது:—

"ஜூன் முதல் வாரம் பல பள்ளிக்கூடங்களின் திறப்பு நாட்களாக இருப்பதனால், மாநாட்டில் தமிழ் ஆசிரியர் பலரும் கலந்துகொள்ள இயலாதென்றும், ஜூலையில் நடத்த கேட்டமைக் கிணங்க 26-5-54ல் தமிழாசிரியர் கழக செயற்குழு கூடி, மாநாட்டைச் ஜூலை திங்களில் நடத்தத் தீர்மானித்தது. ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தமிழாசிரியர் ஒன்றுகூடி நன்கொடை வசூலித்து, தமிழ் ஆசிரியர் குறைகளையும்—பொதுவாக நிறைவேற்றக் கருதும் தீர்மானங்களையும் எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

36, லால்கான் தெரு, சிதம்பரம் என்ற முகவரிக்கும்; புலவர் - மயிலை சிவமுத்து, 17, இரத்தின முதலி தெரு, சென்னை என்ற முகவரிக்கும் எழுதுக.

காமராசரைப் பாராட்டுவது ஏன்?

பத்திரிகைகளின் சிறு செயலுக்குக் கருணாநிதியின் சூடு!

"காமராசருக்கும், ஆச்சாரியாருக்கும் உள்ள ஒரே வித்தியாசம்—இருவரும் மலரானால்—ஆச்சாரியார் அலரி மலர்; காமராசர் கனகாம்பர மலர்! அலரி மலர் விஷம் உடையது; உண்டாரைக் கொல்லும்; ஆனால் அழகுடையது!! கனகாம்பரம் அப்படியல்ல—சற்று அழகு குறைவானாலும் விஷமுடையது அல்ல; உண்டாரைக் கொல்லாது—அவ்வளவுதான்!!! நாங்கள் அந்த வகையில் கனகாம்பர மலர் பரவாயில்லை எனப் பாராட்டுகிறோம்—ஆதரிக்கவில்லை; ஏனெனில் கனகாம்பர மலர் மணமுடையதல்ல—நுகர்ந்து அனுபவிக்க!

'காமராசரை நாங்கள் ஆதரிப்போம்—எப்போது? திராவிட மணம் வீசாத கனகாம்பர மலராயிருக்கும் காமராசர், 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் உரிமை மணம் கமழும் மல்லிகையாக முல்லையாக, ரோஜாவாக மாறும்போது நாம் அவரை ஆதரிப்போம்! அவர் அந்த மணம் பரப்பும் மல்லிகையாகத்தான் போகிறார்!!

"உலக வரலாற்றிலே, விடுதலைப்பயணம் நடத்தியவர்களின் அடிச் சுவடுகள் எல்லாம், 'பைத்தியக்காரர்களின் அடிச்சுவடுகள்' என்றால் எங்கள் விடுதலைப் பயணமும் பைத்தியக்காரத்தனமானதுதான்; உலக விடுதலைவீரர்கள் எல்லாம் பைத்தியக்காரர்கள் என்றால், நாங்களும் பைத்தியக்காரர்கள்தான்; அத்தகைய விடுதலைப் பைத்தியங்கள் ஆயிரம் ஆயிரமாக, லட்சம் லட்சமாகத் தி. மு. கழகத்திற்குத் தேவை—வாருங்கள்—வந்து சேருங்கள்,"

—என்று, ஆலந்தூரில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தோழர் மு கருணாநிதி குறிப்பிட்டார்

ஆலந்தூர் தி. மு கழகச் சார்பில், 27—5—54 மாலை ஓர் பொதுக் கூட்டம் தோழர் மு. தங்கவேலர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோதண்டராமன், முகவை-ஆர். என் பாண்டியன், ஏ. கோவிந்தசாமி, எம் எல் ஏ, என். எஸ் இராசேந்திரன், மு கருணாநிதி ஆகியோர் பேசினர்.

தோழர் முகவை-ஆர். என் பாண்டியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'புதிய கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டது குறித்து, நாம், காமராசரைப் பாராட்டுகிறோமே தவிர, சில வயிறு வளர்க்கும் பத்திரிகைகள் குறிப்பிடுவது போன்று, நாம், காமராசர் மந்திரி சபையை ஆதரிக்கிறோம் என்று எழுதவோ, பேசவோ இல்லை என்பதையும், பாராட்டுதலும், ஆதரித்தலும் வேறு வேறு பொருளுடையவை என்பதையும் மறந்துவிடக் கூடாது

"திட்டம் நல்லதானாலும், கட்சியின் முடிவுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன்; அதுதான் ஜனநாயகமும் கூட,' எனச் சொல்கிறார் நிதி மந்திரி. அவர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்—அவரது கட்சியை, திட்டத்தைக் கைவிடும் முடிவுக்குக் கொண்டுவந்ததே நாம்தான்—தி. மு கழகம்தான் கூட்டத்திற்கு நாட்டு மக்களிடையே ஆர்த்தெழுந்த ஏகோபித்த எதிர்ப்பை ஒன்று திரட்டி, அதற்கு ஒரு போராட்ட உருக்கொடுத்து, திட்டத்தின் காததாவை எதிர்க்கக் களமும் கண்டு, களத்திலே பலி பலவும் தந்தவர் தி மு கழகத்தவர் என்பதை அவர் மறக்கவோ, மறைக்கவோ கூடாது இன்று கட்சிக்குக் கட்டுப்படுவதுதான் ஜனநாயகம் எனப் பத்தினி வேஷம் போடும் இவர், சட்டசபை, திட்டத்தை ஒத்தி வைக்கத் தீர்மானித்த போது ஏன் கட்டுப்பட மறுத்தார்?"

பின்னர், தோழர் என் என். இராசேந்திரன் பேசியதாவது:—

"இந்த நாட்டு மக்களில் பெரும்பாலானோர் இந்த நாட்டவர்க்கு ஆகாதது—தீதானது என்ற முடிவு தந்துவிட்ட ஒரு திட்டத்தை விடாப்பிடியாக அமுல் செய்து வந்தார் ஆச்சாரியார். அந்த ஆச்சாரியாரின் ஆணவப் போக்கை நாடுமுழுவதும் நல்லவர்கள் கண்டித்தனர்; நாமும் கண்டித்தோம்; எதிர்த்தோம்; தியாகங்கள் பல புரிந்தோம்—எனினும், திட்டத்தைக் கைவிட மறுத்தார் ஆச்சாரியார் அவரின் கட்சியிலேயே எதிர்ப்பு மூண்டு, மூலையில் உட்கார்ந்து விட்டிருக்கிற ஆச்சாரியாரின் முதன் மந்திரி பீடத்தில் இப்போது காமராசர் அமர்ந்திருக்கிறார். காமராசரும் மக்களின் மனமறிந்து திட்டத்தைத் திரும்பப் பெற்றுள்ளார். இனியும் அவர், இந்த நாட்டவர்கள் விரும்பும் காரியங்களைச் செய்ய வேண்டுமென்கிறோம்.

அண்ணா அவர்கள் சொல்லியுள்ளதைப் போன்று, 'அரசியல் ஒரு நாடகம்'தான்! ஆச்சாரியார் தாங்கிய முதன் மந்திரி வேடத்தை இப்போது காமராசர் தாங்குகிறார்; வேடத்திற்கான ஆள்தான் மாறியுள்ளதே தவிர, ஆடப்படும் நாடகம் என்னமோ காங்கிரஸ் நாடகம்தான்; அதே வசனமும் பாடலும்தான்; இதை நாங்கள் மறந்துவிடவில்லை; நாட்டவரும் மறக்கமாட்டார்கள்."

இறுதியாக தோழர் மு கருணாநிதி அவர்கள் பேசினார். பல்வேறு மன்றங்கள் கழகங்கள் சார்பில் அவருக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. வரவேற்பு இதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

தோழர் கருணாநிதி பேசுகையில் தனது தொண்டைப் புண்ணினால் அதிக நேரம் பேச இயலாததற்கு வருத்தம் தெரிவித்துவிட்டு, ஆச்சாரியார் கல்வித் திட்டம் ஒழிந்தது இந்த நாட்டு மக்களுக்கு, அவர்களின் தேசிய இயக்கமான தி. மு கழகத்தவருக்கு மகத்தான வெற்றியாகும். திட்டத்தைத் திரும்பப் பெற்றமைக்காக நாம் காமராசரை சிறிது பாராட்டுகிறோம்," என்றார்.

செய்திச் சுருள்

திருப்பூர் வள்ளுவர் படிப்பக ஆண்டுவிழா

22—5—54 காலை 10 மணிக்கு திரு. இரா. ஈசுவரன் தலைமையில் நடைபெற்றது. மாணவர்களுக்கென்று நடைபெற்ற "குறள் ஒப்புவித்தல்" போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. க அன்பழகன் பரிசுகள் வழங்கி வாழ்த்துரை கூறினார் மாலை 6-30 மணிக்கு வள்ளுவர் நிலையில், திரு. என் ஆர் சுப்பிரமணியம் தலைமையில் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் வள்ளுவர் பெரியை விளக்கி சொற்பொழிவாற்றினார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

மெய்யனூர் மதி ஒளி நாடக மன்றம்

24—5—54 இரவு 8 மணிக்கு நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின், 'வாள் முனை' என்ற நாடகம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

சூலூர் வள்ளுவர்படிப்பக உதவி நிதி நாடகம்

18—5—54ல், படிப்பக உதவி நிதிக்காக நடத்தப்பட்ட என். எஸ். கே. நாடக சபையாரின் "பணம்" நாடகத்தின் மூலம் கிடைத்த மொத்த வரவு ரூ. 3093—14—3; நாடகம் நடத்தி முடிக்க ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ 2530—12—6; மீதமான தொகை ரூ 563—1—9 என்று சூலூர் வள்ளுவர் படிப்பகச் செயலாளர் எஸ். என். அற்புதசாமி அறிவிக்கிறார்.

அனுதாபம்

"தோழர் இரா இளம்வழுதி எம்.ஏ, பி எல், அவர்களின் இரண்டாவது குழந்தை இயற்கை எய்தியதற்கு புதுப்பாளையம் தி மு. கழகம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், குழந்தையின் பெற்றோர்களுக்கு அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது," என செயலாளர் அறிவிக்கிறார்.

முத்தமிழ்க் கலைவளர்ச்சி மன்றத் துவக்க விழா

திருப்பூர், மே 29—

23—5—54 காலை 10 மணிக்கு தோழர் சிந்தனைச் செல்வன தலைமையில் நடைபெற்றது தோழர் க. அன்பழகன் அவர்கள் மன்றத்தைத் துவக்கி வைத்துப் பேசினார். தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமெனவும், புதிய கல்வித் திட்டம் ஒழிந்ததற்கு மகிழ்ந்தும், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டபின், தோழர் கா. சு. சோமநாதன் இனிப்பு வழங்கினார்.

இந்திய பிராசீன சித்த வைத்திய சங்கம்

குடந்தை, மே 25—

20—5—54ல், தோழர் ஆர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, சங்கச் செயலாளர் பெர. கோவிந்தபிள்ளை இயற்கை எய்தியமைக்கு அனுதாப தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தலைவரும், பிரமுகர்கள் பலரும் அவரது பெருந்தன்மையைப் பாராட்டிப் பேசினர்.

தமிழ்நாடு புத்தர் சங்கம்

ஈரோட்டில் ஏற்கனவே இயங்கிவரும் தமிழ் நாடு புத்தர் சங்கத்தை 19—5—54ல் சர்க்கார் சட்ட திட்டங்களுக்குட்பட்டு மாவட்ட ரிஜிஸ்திரார் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது. சங்கச் சார்பில், சித்தார்த்தர் இலவச படிப்பகமும், நூல் நிலையமும், முதியோர் இரவுப் பாடசாலையும் நடத்தப்பட்டு வருகிறது.

மூன்று பத்திரிகைகள்

"இசை" வாரப் பத்திரிகை ஆசிரியர் பண்டிட் ஜெய்லானி அவர்கள், கோவை ஜில்லா அடிஷனல் மாஜிஸ்திரேட் முன்னிலையில் 'யந்திர உலகம்' மாதம் இரு முறைப் பத்திரிகைக்கும், 'முஸ்லிம் உலகம்' மாதப் பத்திரிகைக்கும், ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் பதிவு செய்து கொண்டார்.

புதிய கல்வித் திட்ட ஒழிப்பு: நாடெங்கும் வெற்றி விழா

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் அறிக்கைப்படி கல்வித் திட்டம் ஒழிந்ததற்காக 23—5—54 ஞாயிறன்று கழகக் கட்டிடங்களை தோரணங்களால் அலங்கரித்தும், சிறுவர்களுக்கு இனிப்புத் தின்பண்டங்கள் வழங்கியும், கூட்டங்கள் நடத்தியும் வெற்றி விழாக் கொண்டாட்டம் தமிழகம் எங்கும் நடைபெற்றிருக்கிறது. அதன் சுருக்கங்கள் மட்டும் தரப்படுகிறது:—

சென்னையில்:

மீர்சாகிப்பேட்டை

தி மு. கழகச் சார்பில், செயலாளர் புரட்சிமணி அவர்கள் இல்லத்தில், காலையில் குழந்தைகளுக்குச் சிற்றுண்டி அளிக்கப்பட்டது. 10 மணிக்கு முகவை ஆர். என். பாண்டியன் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர்கள் இளவரசு, வெற்றிவீரன், பாலன், தென்னரசு ஆகியோர் பேசினர்.

ராயப்பேட்டை

87-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தோழர் ஏழுமலை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் அரங்கநாதன், என். சுந்தரம், ஞானசேகரன், செயராமன், ஜான, கோ. இளவரசு ஆகியோர் பேசினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

புளியந்தோப்பு

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டதுடன் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர் கல்லப்பன் தலைமையில் தோழர்கள் இளங்கோ, இளவரசு, சுப்பிரமணி, கெங்காதரன், நாராயணசாமி, அன்பானந்தன் ஆகியோர் பேசினர்.

திருவொற்றியூர்

தி. மு. கழக அனுதாபிகளால் காலையில் 1,500 ஏழைகளுக்கும், தொழிலாளிகளுக்கும் கஞ்சி உணவு வழங்கப்பட்டது. மாலையில் சிறுவர்களுக்குத் தின்பண்டம் வழங்கப்பட்டது.

மூலகொத்தளம்

தி. மு கழக அனுதாபிகளால் கொடியேற்று விழாவும், சிறுவர்களுக்குத் தின்பண்டமும், மாலையில் காப்பியும் வழங்கப்பட்டது.

* * *

7-வது வட்ட தி. மு கழகச் சார்பில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. தோழர் தே. கா. அண்ணாமலை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அயன்புரம்

பாரதிதாசன் நூல் நிலையத்தின் சார்பில வெற்றிவிழா நடைபெற்றது.

வியாசர்பாடி

குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது கல்வித்திட்ட மறியலில் சிறை சென்ற தோழர் மதிவாணனுக்கு கைத்தறித் துணி தரப்பட்டது.

கோமளீஸ்வரன்பேட்டை

36-வது வட்ட தி மு. கழகச் சார்பில் தோழர் வி. இளஞ்சேரலாதன் தலைமையில் தோழர்கள் சாண்டின், சாமி-மாறன் மாணிக்கம், செங்குட்டுவன், மருதவாணன், கனகராசன் ஆகியோர் பேசிய பின், வீதிதோறும் சென்று சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

சிந்தாதிரிப்பேட்டை

கழகக் கட்டிடத்தில், தோழர் மதியப்பன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்: இனிப்புகள் வழங்கப்பட்டது.

சூளை

மருந்தகடை லைனில் தோழர் முருகேசன் இல்லத்தில் சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

கொருக்குப்பேட்டை

தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நாகூர் அனிபா இசை விருந்தளித்தார். தோழர் இரா. செழியன் சொற்பொழிவாற்றினார். கல்வித் திட்ட அறப்போரில் சிறை சென்ற தோழர்கள் எம். ஈ. இராசகோபால், பெ. சந்திரன் ஆகியோருக்கு மாலையிட்டுப் பாராட்டினர்.

* * *

23—5—54 காலை 10-மணிக்கு தோழர் அ. குப்புசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பலர் பேசினர். இரவு முத்தையா நினைவு இரவுப் பள்ளியில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

தொண்டையார்பேட்டை

கழக அலுவலகத்தில் தோழர் சம்பந்தன் தலைமையில் விழா நடைபெற்றது 100 சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கலை விழா!

வேலூர் மகந்த் ஸ்கூல் விளையாட்டு மைதானத்தில்
(கண்டோன்மென்ட் ரயில்வே ஸ்டேஷன் ரோடு)
திறந்த வெளி அரங்கில்

3—6—54 வியாழன் இரவு 9-30 மணிக்கு

சிவாஜி கணேசன்,

S V. சகஸ்ரநாமம், M. மைனாவதி, M. N. ராஜம் நடிக்கும்

"இருளும் ஒளியும்"

3-D மூவர்ண நாடகம்

கட்டணம்: ரிசர்வ்டு ரூ 3—0—0, சேர் ரூ. 2—0—0
பெஞ்ச் ரூ 1—8—0, காலரி ரூ. 1—0—0
ஆண்கள்: தரை அணா 8, பெண்கள்: தரை அணா 6

6—6—54 ஞாயிறு இரவு 9-30 மணிக்கு

அண்ணா அவர்கள் தலைமையில்

M G ராமச்சந்திரன் & குழுவினர் நடிக்கும்

"இன்பக் கனவு" நாடகம்

—K. S. பட்டாபிராமன், அமைப்பாளர்

உலக அரங்கில்

ஜினீவா :
இந்தோ - சீனாவில் போரிடும் இரு தரப்பு படையினரிடையே பேச்சுவார்த்தைகள் புதனன்று ஆரம்பமாகின்றன. ஜினீவா மாநாட்டினர் போர் நிறுத்தம் பற்றி கலந்து பேசுமாறு பிரெஞ்சு, வியட்நாம் அதிகாரிகளுக்கு உத்திரவிட்டனர்.

★

ஹோனலூலு :
தெற்கு ஹாவாய் பகுதியில் உள்ள எரிமலை ஒன்று நெருப்பைக் கக்கியது 600 அடி உயரத்திற்கு நெருப்புப் பிழம்பு சென்றும் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

★

கம்பாலா :
உகந்தா தேசியக் காங்கிரசார், ஆப்பிரிக்கர்கள் சர்க்காரின் போக்கை எதிர்த்து, தங்கள் முக்கியத் தேவைகளுக்கான பொருள்களை மட்டும் வாங்கிக் கொண்டு, மற்ற பொருள்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். இதை கண்ட கவர்னர் சர் ஆண்ட்ரு கோகன் நாடு முழுமையும் நெருக்கடி நிலைமைப் பிரகடனம் செய்துள்ளார்.

★

கோலாலம்பூர் :
மலேயாவின் புதிய ஹை கமிஷனராகப் பதவி ஏற்ற டோனுல்ட்மாகிலிவ்ரி, தான், ஜெனரல் டெம்ப்ளரின் வழியில் சென்று கம்யூனிசத்தை வேருடன் களைய முயற்சிப்பேன் என்றார். கம்யூனிசம் மலேயா அரசாங்கத்தின் எதிரியாகுமென்று அவர் மேலும் கூறினார்.

★

ஜார்ஜ் டவுன் :
கயானா மக்கள் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த ருஷ்லக் என்பவரின் ஹேபியஸ் கார்பஸ் மனுவை ஏற்றுக்கொண்டு அவரை விடுதலை செய்யுமாறு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. நன்னடத்தைக் கோரிய சர்க்கார் பத்திரத்தில் கையெழுத்துப் போட மறுத்ததால் அவர் சிறை யிடப்பட்டார்.

★

ரியோ டி ஜினிரோ :
மினியாஜெரான் தலைநகரான பிலோ ஹாரிசாண்டியில் இரண்டு எஞ்சின் விமானமொன்று விபத்திற்குள்ளாயிற்று; 15 பிரயாணிகளும், 4 விமானமோட்டிகளும் மரணமடைந்தனர்.

★

நியூயார்க் :
இந்தோ சீன — தாய்லந்து எல்லைக்கு ஐ. நா. பார்வையாளர்களை அனுப்பி, நிலைமைகளை நேரில் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற தாய்லாந்தின் கோரிக்கையை வியாழனன்று ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சில் ஆலோசிக்கும்.

★

பாரிஸ் :
பிரெஞ்சு சர்க்காரில் இந்தோ சீன விவகார அமைச்சராக இரண்டு தினங்களுக்கு முன் பதவி ஏற்ற எம். ரெயிமாண்ட், உடனே தன் அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்யவேண்டும் என்று ஜெனரல் பார்லிமெண்டரி கட்சியினர் கோரிக்கையை ஏற்று அவர் ராஜிநாமா செய்தார்.

★

மாஸ்கோ :
முதலில் அமெரிக்கா, அணுசக்தி ஆயுதங்களை உடனே தடை செய்ய நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ள ஒப்புக்கொண்டால்தான் ஐஸ்பர் அணுசக்திப் பற்றிய பேசும் என்ற அமெரிக்காவின் கருத்தை மாஸ்கோவின் 'பிராவ்தா' இதழ் மறுத்திருக்கிறது.

கொலம்பியா :
அமெரிக்கர்கள், சமாதானம் நீதி, உண்மை இவைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு போதிய இராணுவ பாதுகாப்புடன் எல்லா நாடுகளும் இன்பமாய் வாழ வேண்டுமென்று தான் எண்ணுகிறார்கள் என்று ஐசன் ஹோவர் கொலம்பியா பல்கலைக் கழக விழாவில் பேசுகையில் கூறினார்.

★

கெய்ரோ :
சூயஸ் கால்வாய்ப் பகுதியில் திங்கள் அன்று பிரிட்டிஷ் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுக் கிடந்ததாகத் தெரிகிறது.

* * *

கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கைகளின் பயனால் எகிப்தில் 252 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

எகிப்து விடுதலை இயக்கத்தின் நிர்வாகக் குழுவிலிருந்து ஜெனரல் நகிப்பை நீக்கிவிட்டனர் என்று தெரிகிறது.

★

லண்டன் :
பிரிட்டிஷ் இராணுவத்தில் அதிகாரிகளும், சிப்பாய்களுமாகச் சேர்ந்து 8,45,930 பேர் இருக்கின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சர் காரியாலயம் தெரிவித்தது.

★

டோக்கியோ :
கொலை, கொள்ளை குற்றங்களுக்காக ஒரே நாளில் 500 பேர்களை ஜப்பான் போலீசார் கைது செய்தனர்; இதுவரை 4,000 பேர் டோக்கியோவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

★

ஹானோய் :
ஹானோய், ஹைப்பாங் பாதையைத் துண்டிக்க வியட்மின் துருப்புகள் கடுமையாகத் தொடர்ந்து போரிடுகின்றன என்று பிரெஞ்சு இராணுவ தலைமைக் காரியாலயம் அறிவிக்கிறது.

★

மெல்போர்ன் :
இப்போது ஆஸ்திரேலியாவில் உள்ள 'மென்சி' சர்க்கார் தேர்தலில் வெற்றியடைந்து மீண்டும் பதவிக்கு வர இருக்கின்றனர். இனி அங்கே கம்யூனிச எதிர்ப்பு அதிகமாகும் என்று கூறலாம்.

★

கொழும்பு :
இந்தியர்களுக்குப் பாராளுமன்றத்தில், பிரதிநிதித்துவம் அளிப்பது பற்றி இலங்கை அரசியல் சட்டத்தை திருத்தப் போகும் செய்தி பற்றி இலங்கை சர்க்கார் இந்திய சர்க்காருக்குத் தெரிவித்தனர்.

★

ஏதென்ஸ் :
மார்ஷல் டிட்டோவின் வருகையை முன்னிட்டு, அவர் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று கருதி ஏராளமான பேரை ஏதென்ஸ் போலீசார் கைது செய்தனர்.

★

டூனிஸ் :
டூனிஷியாவில் பிரெஞ்சு இராணுவ முகாம் ஒன்றை கலகக்காரர்கள் தாக்கி நாசமாக்கினார்கள்; கலகக்காரர்களை எதிர்த்து போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

★

ஹாங்காங் :
இந்தோ சீனாவில் அரசியல் மாநாடு தக்க முறையில் நடைபெறாமல் இராணுவ வெற்றி மட்டும் ஏற்பட்டால் பயன் ஏதும் இல்லை என்று 12 நாடுகளைச் சேர்ந்த பல அரசியல்வாதிகள் ஒரு அறிக்கையில் கூறுகின்றனர்.

கழகக் கூட்டங்கள்

★

தியாகதுருகம்

3—6—54 மாலை 6 மணிக்கு

பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

★

பனங்குளம்

அழகிரி சதுக்கத்தில்

3—6—54 மாலை 6½ மணிக்கு

தலைவர் : ம. ரா. மணிமொழி

பேசுவோர் :
மு. கருணாநிதி
என். எஸ். இளங்கோ
எஸ். எஸ். இராசேந்திரன்

தோழர் குமரவேல் நினைவுக்கல் நடல்

4—6—54 வெள்ளியன்று காலை, மணப்பாறையில், தோழர் குமரவேலின் நினைவாக நடுகல் நடலும். மாலை இரங்கற் போதுக் கூட்டமும் நடைபெறும்.

திருச்சி தி. மா. மு. கழக செ. கு. உறுப்பினர்கட்கு

4—6—54 மாலை 4 மணிக்கு 24, சின்னக்கடைத் தெரு, (திருச்சி)யிலுள்ள மாவட்ட தி. மு. கழக அலுவலகத்தில் தி. மா. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும். பொருள் : திருச்சி மாவட்ட மாணவர் மாநாடு நடத்துவதுபற்றியது.

திருமண அழைப்பு

கோவை, மே 25—

4—6—54 வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு ஒட்டன்சத்திரம் திரு வே. சோமசுந்தரம் அவர்களின் திருமகள் சுசீலாவை எனது வாழ்க்கைத் துணைவியாக அண்ணா அவர்கள் தலைமையில் ஏற்றுக் கொள்ளும் திருமண விழாவிற்கு இயக்கத் தோழர்களும், ஏனையோரும் வந்திருந்து சிறப்பிக்கக் கோருகிறேன்.

ப ஞ்சு—பாலசுந்தரன்.

தி.மு.க. பொதுச்செயலாளர்

அண்ணாதுரை சுற்றுப் பயண நிகழ்ச்சி

4—6—54: காலை: ஒட்டன் சத்திரம் திருமணம்; மாலை 6 மணிக்கு தேவபாண்டலம் திருமணப் பாராட்டுக் கூட்டம்
இரவு 8 மணிக்கு கள்ளக்குறிச்சி (தெ. ஆ.) தி. மு. கழகப் பொதுக்கூட்டம்.
6—6—54: காட்பாடி (வேலூர்)
7—5—54: சென்னை, ஆள்வார் பேட்டை மக்கள் மன்றம் ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்.

ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு சுற்றுப்பயணம்

ஜூன் 4: ஒட்டன்சத்திரம் காலை: திருமணம் மாலை 6 மணி கணியூர் கூட்டம்
6: பெரியகுளம்
7: ஆண்டிபட்டி
11: காட்டுப்புத்தூர் காலை: திருமணம்; மாலை: பொதுக்கூட்டம்
12: மேட்டுப்பாளையம் (திருச்சி)
13: துறையூர்
18: மாரண்டஹள்ளி (சேலம்)
21 முதல் 30-ந் தேதி வரை தஞ்சை மாவட்டம்

செய்திக் கதிர்

தியாகி நிலம்
'தியாகிகளுக்கு நிலம் கொடுக்கும் விஷயம் பற்றி மீண்டும் ஆலோசிக்கப்படுமோ?' என்று கேட்டதற்கு, 'எந்த விஷயமும் திரும்ப ஆலோசனை செய்யப்படலாம்,' என்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறினார்.

வேலை நிறுத்தம்
வேலூரில் வேலை நிறுத்தம் செய்யும் பீடித் தொழிலாளர்கள் தொழிற்சாலை நிர்வாகத்தினருடையே சமரசம் செய்து வைப்பது என்று வேலூர் நகரசபை தீர்மானம் நிறைவேற்றியது.

படப்பிடிப்பு
இந்திய சர்க்காரின் பிலிம் டிவிஷனின் தலைவராயிருந்து சர்க்காரின் பிரச்சாரப் படங்களை டைரக்ட் செய்ய வி. சாந்தாராம் ஒப்புக் கொண்டுள்ளார். கௌரவமாக வேலை பார்க்கும் இவர், ஐந்தாண்டுத் திட்டம் பற்றி படங்கள் எடுப்பார்.

மலை ஏற்றம்
24 299 அடி உயரமுள்ள கனேஷ்ஹிமல் மலையின் உச்சிக்குச் செல்ல முயற்சித்த 14 பேர் கொண்ட ஜப்பானியக் குழுவினர் தோல்வியடைந்தனர் என்று தெரிகிறது.

தேர்தல்
வருகிற ஜில்லா போர்டு தேர்தலில் வாக்குப் பதிவு சீட்டுக் குறிப்பிடுவதன் மூலமே வாக்குப் பதிவு நடைபெறும் என்று தெரிகிறது.

திட்டம்
காஷ்மீர் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தீட்டவும், மேற்பார்வையிடவும் இரண்டு நிபுணர்களைத் தருமாறு திட்டக் கமிஷனை காஷ்மீர் சர்க்கார் கேட்டிருக்கிறது.

கால்நடை
ஓங்கோலில் கால்நடைக் கண்காட்சி ஒன்றை பாராளு மன்ற உறுப்பினர் பி. வி. ராமச்சந்திர ரெட்டி திறந்து வைத்தார்.

காந்திநிதி
காந்தியார் நினைவு நிதிக் கமிட்டியினர் இனிமேல் குஷ்டரோக தடுப்பு, பூதான பிரச்சாரம், மருத்துவ உதவி, காந்தியக் கொள்கை விளக்கம் ஆகிய இவைகளில் கவனம் செலுத்துவதென்று முடிவு செய்தனர்.

வேலையின்மை
கோவை மில் அதிபர்கள் மாநாட்டில் பேசுகையில் நாட்டின் தொழில் அபிவிருத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழி என்று சென்னை முதல் அமைச்சர் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினை
நேரடிப் பேச்சு வார்த்தைகளால் தீர்க்க முடியவில்லை என்றால் காஷ்மீர் பிரச்சினைக்காக மீண்டும் ஐ. நா.-விற்குச் செல்ல வேண்டியதே என்று பாகிஸ்தான் முதல் அமைச்சர் முகமது அலி கூறினார்.

விடுதலை
ஷேக் அப்துல்லா நீண்டகாலம் அவருடன் கைது செய்யப்பட்டவர்களான பாதுகாப்புக் கைதிகளைத் பண்டிகையின்போது விடுதலை செய்யப்போவதாக காஷ்மீர் சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறினார்.

சமரசம்
சென்ற 25 நாட்களாக திருவனந்தபுரத்தில் நடைபெற்று வரும் விவசாயிகள் சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது என்று தெரிகிறது. திரு-கொச்சி தொழில் அமைச்சரின் உறுதி மொழியின் பேரில் சத்தியாக்கிரகம் நின்றது.

கராச்சி சர்வாதிகாரம்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவிரித்தாடுகிறது. ஜனநாயகத்தையும், மாகாண ஆட்சி முறையையும், கராச்சி படுகொலை செய்துவிட்டது"—என்று ஒருமுகமாகக் கண்டனம் கிளம்பியிருக்கிறது — முகமதலியின் போக்குக்கு!

கராச்சியிலேயே இந்தக் கருத்துக் கொண்டுள்ள பலர், முகமதலி சர்க்காரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

முஸ்லீம் லீகர்கள் மட்டுமே மகிழ்கின்றனர்—கிழக்கு வங்கத் தேர்தலில் ஏற்பட்ட வேதனை இப்போதுதான் தீர்ந்தது என்று எண்ணுகிறார்கள்!

அவாமி லீக் தலைவர், "ஹக் நீக்கப்பட்டது, ஜனநாயகத்தைக் கொலை செய்வதாகும்," என்று கராச்சியில் கண்டனம் தெரிவித் [illegible] தனர்.

பத்திரிகை ஆசிரியர்கள் மட்டும் 11 பேர், கராச்சியில் கைதாயினர்.

பத்திரிகைகளின் மீது சர்க்காரின் கட்டுப்பாடு அதிகமாகி விட்டது.

முகமதலி ஆதரவு பத்திரிகைகள் ஒன்றிரண்டு தவிர மற்றவைகள், தலையங்கமே எழுதவில்லை.

விருதுநகர் நகர சபைத் தேர்தல்

தோழர் ஆசைத்தம்பி வெற்றி

விருதுநகர் நகரசபை 22-வது வார்டுக்கு 27—5—54 ல் நடைபெற்ற உபதேர்தலில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சுயேச்சையாகப் போட்டியிட்டு 431 ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றார். கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக போட்டியிட்ட தோழர் வீராச்சாமி 111 ஓட்டுகளும், பிரஜா—சோஷியலிஸ்டு கட்சியின் சார்பில் போட்டியிட்ட தோழர் அருணாசலம் 18 ஓட்டுகளும் பெற்று தோல்வி கண்டனர்.

முகவரி

சிறையிலிருந்து ஜாமீனில் வெளிவந்துள்ள தூத்துக்குடி தி. மு. கழகச் செயலாளர் தோழர் என். நடராசன் அவர்களுக்கு கடிதம் எழுதுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் :—

என். நடராசன்,
நெல்லை லாட்ஜ்,
மெயின் ரோடு,
திருநெல்வேலி சந்திப்பு.

முடி இழந்த மன்னன் பரூக்கையும், அவரது அபிமானப் பெண்மணி ஒருவரையும் புகைப் படம் எடுத்தவரை பரூக் பாதுகாவலர் தாக்கினார்கள். இதை ஒட்டி பரூக் வெனிசைவிட்டு வெளியேற வேண்டுமென்று வெனிஸ் மேயரும், மற்ற நகர சபை உறுப்பினர்களும் பரூக்கைக் கேட்டுக் கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, [illegible] செட்டித் தெரு, [illegible]புரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.